# பத்திரிக்கைச் செய்தி

## பட்டா பெயர் மாற்றம் செய்ய லஞ்சம் கேட்டு பெற்ற கிராம நிர்வாக அலுவலருக்கு சிறைதண்டனை

கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிக்கோட்டை வட்டம், கெலமங்கலம் வெங்கடாபுரம் கிராமத்தை சேர்ந்த திருமதி.சம்பங்கியம்மாள், க/பெ.நரசிம்மப்பா என்பவரின் தாயார் தானமாக எழுதிக்கொடுத்த 6 ஏக்கர் நிலத்தை தனது பெயருக்கு பட்டா மாற்றம் செய்ய வேண்டி தனது மகனான திரு.ரவீந்திரா மூலம் ஜாகீர் காருப்பள்ளி கிராம நிர்வாக அலுவலரிடம் விண்ணப்பித்திருந்தார். விண்ணப்பத்தினை பரிசீலனை செய்து தக்க நடவடிக்கை மேற்கொள்ள லஞ்சம் கேட்டு அலைகழித்த, திரு.K.ராமன், கிராம நிர்வாக அலுவலர் என்பவர் மீது வழக்கு பதிவு செய்து, லஞ்சப்பணம் ரூ.4,000/- பெற்றுக்கொண்ட திரு.K.ராமன், கிராம நிர்வாக அலுவலர், 08.01.2015ஆம் தேதி கிருஷ்ணகிரி லஞ்ச ஒழிப்பு துறையினரால் கைது செய்யப்பட்ட வழக்கில் இன்று 15.03.2024ஆம் தேதி கிருஷ்ணகிரி தலைமை குற்றவியல் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்களால் தீர்ப்பு வழங்கப்பட்டது. வழக்கில் மேற்படி கிராம நிர்வாக அலுவலர் திரு.K.ராமன் குற்றவாளி என்று முடிவுசெய்து, அவருக்கு ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 7-ன்கீழ் தலா நான்கு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும் அபராதமாக தலா ரூ.1,000/-மும், அபராதம் கட்ட தவறினால் மூன்று மாதங்கள் சிறை தண்டனையும், ஊழல் தடுப்பு சட்டப்பிரிவு 13(2) உ/இ 13(1)(d)-ன் கீழ் தலா ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும், அபராதமாக தலா ரூ.5,000/-மும், அபராதம் கட்ட தவறினால் ஆறு மாதங்கள் சிறை தண்டனையும் வழங்கி தீர்ப்பு வழங்கப்பட்டது. மேற்படி தண்டனைகளை ஏககாலத்தில் அனுபவிக்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.